**செய்தி வெளியீடு – 2.4.2010**

## திருநெல்வேலி மாவட்டம் பள்ளமடை குளத்தில் மூழ்கி உயிரிழந்த மூன்று பள்ளி மாணவர்கள் குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 3 இலட்சம் ரூபாய் நிவாரண உதவி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

திருநெல்வேலி மாவட்டம், பள்ளிக்கோட்டை கிராமம் பள்ளமடை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பயின்று வந்த திரு. அக்னிமாடன் என்பவரின் மகன் மகேந்திரன் (12 வயது), திரு. மாடசாமி என்பவரின் மகன் செல்லத்துரை (8 வயது), திரு. சுப்பிரமணியன் என்பவரின் மகன் முத்துசாமி (8 வயது) ஆகிய மூன்று மாணவர்கள் 26.2.2009 அன்று குளிக்கச் சென்றபோது, குளத்தில் மூழ்கி உயிரிழந்தனர்.

இத்துயர சம்பவம் குறித்த தகவல் தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்த மூன்று மாணவர்களின் குடும்பங்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். அத்துடன், திருநெல்வேலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். இராமசுப்பு அவர்களின் பரிந்துரைகளை ஏற்று உயிரிழந்த மூன்று மாணவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் சிறப்பினமாகத் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 3 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (2.4.2010) ஆணையிட்டுள்ளார்.

******